திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனர்ஜென்ம மூலை என்ற நீர்த்தேக்கம் மலையடிவாரத்தில் அமைந்துள்ள பகுதியாகும். மழைக் காலங்களில் மழை நீர் பெரும் அளவில் வெள்ளமாக வந்து கானாற்றில் ஓடி வீணாகிறது. இந்த மழை நீர் வீணாகிவிடாமல் இந்த நீர்த்தேக்கத் திட்டத்தை அமைத்தால் சுமார் சுற்றிலும் உள்ள 30 கிராம விவசாயப் பெருங்குடி மக்களின் விவசாய மேம்பாட்டுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். எனவே, இதை அமைத்துத்தர இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கின்ற நீர் வரத்தைப் பொறுத்து அந்தப் பகுதியிலே அணைக்கட்டு கட்டுகின்ற திட்டம் தற்போது பொதுப் பணித்துறையினுடைய பரிசீலனையிலே இல்லை. அணைக்கட்டு கட்டுகின்ற நேரத்திலே அதற்கான நீர்வரத்து, அதற்கான அந்த விகிதாச்சார அடிப்படை இருக்க வேண்டும். ஆனால் இந்தப் பகுதியிலே வருகின்ற நீர் வரத்தைப் பொறுத்து ஒரு குட்டை அமைக்கின்ற திட்டம் இருக்கிறது என்று சொன்னேன். ஏறத்தாழ 3,60,000 ரூபாய் செலவிலே குட்டையமைக்கின்ற திட்டம் நம்முடைய பரிசீலனையிலே இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல சம்பந்தப்பட்ட நில நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒத்திசைவு வந்த உடனேயே அந்தக் குட்டை அமைக்கின்ற பணி பொதுப்பணித் துறையினால் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 251. டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அன்னூரில் பேருந்து நிலையம்.

*251—1103—டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி ஒன்றியம் அன்னூரில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992 மார்ச் 17]

(அ) அவினாசி ஒன்றியம் அன்னூரில் பேரூராட்சியின் பராமரிப்பில் பேருந்து நிலையம் ஏற்கனவே இயங்கி வருகிறது. எனவே, அரசிடம் செயற்குறிப்பு எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் (திருமதி) மு. சின்னியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசி தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. அவினாசி தொகுதி அன்னூரில் மொத்தம் 21 பஞ்சாயத்துக்கள் உள்ளன. சுமார் 1½ இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அங்கு சந்திக்கிறார்கள். திருப்பூரிலிருந்து ஊட்டி, மேட்டுப்பாளையம், கோயம் பத்தூர் போன்ற வண்டிகள் சந்திக்கும் பொது இடமாக இருக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் ஒரு சிறு இடத்தில் வாகனங்களை நிறுத்துவதில் பல்வேறு தொழில்களைச் செய்வதற்கு பொதுமக்களுக்கு சிரமமும் வண்டிகளை பிரதான சாலைகளில் நிறுத்துவதால் விவசாய பெருமக்களுக்கும், மாணவர்களுக்கும் சிரமம் ஏற்படுவதால், மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள். எனவே மனம் குளிர நல்லாட்சி புரிகின்ற நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில் எங்களது அன்னூர் தொகுதிக்கு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் — சமுதாயக் கூடம் பேருந்து நிலையம் உள்ளடக்கிய ஒரு பேருந்து நிலையம் அமைத்துத்தர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்துனுடைய முதல்வர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடன் கலந்தாலோசித்து இதுபற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252. திரு. வி. கே. சின்னசாமி. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

252—

நெல் மூட்டைகளை எடுத்துச்செல்ல லாரி, டிராக்டர் வாங்கல்

*1887—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை எடுத்துச்செல்ல லாரி, டிராக்டர் போன்ற வாகனங்கள் [illegible] செய்யுமா?